Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 22, 2022

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 22, 2022 | ஒளி: 07 கதிர்: 238 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

## யாழில் கூலிக்கு யாசகம் பெற்றவர்கள் கைது



■ எம்.றொசாந்த்

சாவகச்சேரியில் குழந்தைகளுடன் யாசகம் பெற்றவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

# சர்வதேச நாணய நிதியம் கட்டுப்பாடுகளை விதிக்காது

### இருந்தால் நிரூபிக்குமாறு ஹர்ஷ எம்.பி சவால்



உதவி வழங்கும் போது எந்தவொரு நாட்டுக்கும் சர்வதேச நாணய நிதியம் கட்டுப்பாடுகளை விதிக்காது என்று தெரிவித்த, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, சர்வதேச நாணய நிதியம் எப்போதாவது அத்தகைய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளை விதித்துள்ளதா என்பதை நிரூபிக்குமாறு தற்போதைய நிர்வாகத்துக்கு சவால் விடுத்தார். நேற்று (21) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சர்வதேச நாணய நிதியத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு பொதுமக்கள் உடன்பட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதாக அரசாங்கம் தெரிவித்தமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நோய் எதிர்ப்பு சக்தி உயர்ந்த பின்னர்

## சுகாதார சட்டங்களை நீக்க முடியும்

### பூஸ்டர் பெற்றிருந்தாலும் மரணத்துக்கு வழிவகுக்கும்



நோய் எதிர்ப்பு சக்தி உயர் மட்டத்தை அடைந்தவுடன் சுகாதார சட்டங்களை முறையாக நீக்க முடியும் என்று தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, நாட்டின் மக்கள் தொகையில் கணிசமான பகுதியினருக்கு பூஸ்டர் தடுப்பூசி கிடைத்தவுடன் அத்தகைய தளர்வு சாத்தியமாகும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலை திசைதிருப்ப கடும் முயற்சி

### ரஞ்சித் குற்றச்சாட்டு: ஷானியின் மனுவை கோடிட்டுக் காட்டுகிறார்



ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பான விசாரணையை திசைதிருப்ப அரசாங்கம் மேற்கொண்டுள்ள மற்றுமொரு முயற்சி, குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் ஊடாக அம்பலமாகியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவில் இருந்தும் இந்த விடயமே தெளிவாகிறது.

தொடர்ச்சி P2



## பிரதான சுட்டெண்கள் சரிவு

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை கொடுக்கல் வாங்கல்கள் நேற்றைய தினம் (21) கொடுக்கல் வாங்கல்கள் நிறைவின் போது பிரதான சுட்டெண் 542.67 புள்ளிகள் சரிவடைந்து 11,591.37 புள்ளிகளாகவும், S&P SL20 சுட்டெண் 203.98 புள்ளிகள் சரிவடைந்து 3,936.67 புள்ளிகளாகவும் பதிவாகியிருந்தன.

தொடர்ச்சி P2



கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்பதற்கு

## இலங்கை, இந்திய பக்தர்களுக்கு அனுமதி

### வெளிவிவகார அமைச்சு

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு இலங்கை, இந்திய பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு இரு நாட்டு பக்தர்களும் மட்டுப்படுத்தப்பட்டளவில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 11 ,12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

## 21 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

### இந்தியாவுக்கு அனுப்புமாறும் கட்டளை




யாழ்ப்பாணம், பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 03 வருட சிறைத்தண்டனை விதித்து பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிருஷந்தன், நேற்று (21) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## கடமையிலிருந்து விலகிய லன்சா அறிக்கை வெளியிடுவார்



தனது அமைச்சின் கடமைகளில் இருந்து விலகியிருந்த இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, பாராளுமன்றத்தில் இன்றையதினம் (22) அறிக்கையொன்றை வெளியிடவுள்ளார் என அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## வெட்டிய மரக்கிளை விழுந்து ஒருவர் பலி

■ பி.கேதீஸ்



200 வருடம் பழைமை வாய்ந்த ஆலமரமொன்றின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது, அதன் கிளையொன்று முறிந்து, வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திய நபர் உயிரிழந்த சம்பவம், தலவாக்கலை லோகி தோட்டத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது

தொடர்ச்சி P2

பாட்டலிக்கு எதிரான வழக்கு

## மார்ச் 29இல் விசாரணை குறித்த உத்தரவு



தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள வழக்கின் விசாரணைக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தாக்கல் செய்துள்ள மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா, இல்லையா என்ற உத்தரவு எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (21) அறிவித்தது.

தொடர்ச்சி P2

## 2 விமானங்களை இலவசமாக வழங்குகிறது அமெரிக்கா

இரண்டு கடல்சார் கண்காணிப்பு விமானங்களை இலங்கை அரசாங்கத்துக்கு இலவசமாக வழங்க அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக இலங்கை விமானப்படை, நேற்று (21) தெரிவித்தது. இலங்கை விமானப்படை மூலம் இயக்கப்படும் வெளிநாட்டு இராணுவ விற்பனை ஒப்பந்தத்துக்கு அமையவே விமானங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் முதல் விமானம் 2022 இன் பிற்பகுதியில் அல்லது 2023 இன் முற்பகுதியில் விமானப்படைக்கு வழங்கப்படும் என விமானப்படை பேச்சாளர் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை


கொரோனா வைரஸ் தொற்று பரவலால் மூடப்பட்டுள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஹோமாகம, பிட்டிபனயில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப பீடம் மீள திறக்கப்படாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

எரிபொருள் ஏற்றி வந்த

## 2 கப்பல்கள் 3 நாள்களாக நங்கூரமிட்டுள்ளன

### டொலர் பற்றாக்குறையால் தரித்து நிற்கிறது என்கிறார் பாலித



கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ள இரண்டு எரிபொருள் தாங்கி கப்பல்கள், டொலர் பற்றாக்குறையால் மூன்று நாள்களாக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "டொலர் பிரச்சினையை தீர்க்க டொலரை கடன் பெறவேண்டும்"

### அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு: கட்டுப்பாடு அவசியம் என்கிறார்



நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினையைத் தீர்க்க எந்தவொரு நாட்டிடம் இருந்தாவது டொலரை கடனாகப் பெற வேண்டுமெனத் தெரிவித்துள்ள நீர்வளங்கள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, எரிபொருள் பயன்பாட்டையும் மட்டுப்படுத்த வேண்டும் என்றார். நாட்டில் தற்போது காணப்படும் டொலர் பிரச்சினையை நாம் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். டொலரை நேரடியாக கடனாகப் பெறச் சென்றால் நிபந்தனைகளை விதிப்பர். அவ்வாறான நிபந்தனைகள் நாட்டுக்கு மிகவும் துரதிர்ஷ்டமாக அமைந்து விடும். இதன்மூலம் வட்டி மாத்திரமல்ல தாமதக் கட்டணம், அபராதத் தொகையையும் அறவிடுவர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சர்வதேச நாணய நிதியம் கட்டுப்பாடுகளை விதிக்காது

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கான காலம் முடிந்துவிட்டதால், அரசாங்கம் இனிமேல் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைச் சார்ந்திருக்க முடியாது என்று சுட்டிக்காட்டினார். எரிபொருள் நெருக்கடியானது எரிசக்தி நெருக்கடியாக உயர்ந்துள்ளதாகத் தெரிவித்த அவர், அதன் மூலம் நாட்டின் வங்கி முறைமையின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் நிதி நெருக்கடியானது கடுமையாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்ட சில குழுக்கள் கூறுவது போன்று உள்நாட்டு செயற்பாட்டின் மூலமோ அல்லது வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருகை தந்து ஹோட்டலில் தங்குவதற்கு பணம் செலவழிப்பதன் மூலமோ இந்த நெருக்கடியை தீர்க்க முடியாது.

தற்போதைய நிலைமை தொடருமானால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்க வேண்டாம் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு உத்தரவு பிறப்பிக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் ஒட்டுமொத்த சீர்திருத்தத் திட்டம் உள்ளிட்ட தொடர்புடைய நடைமுறைகளை கோடிட்டுக் காட்டும் அந்தந்த அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுடன் மட்டுமே சர்வதேச நாணய நிதியம் உடன்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சாத்தியமான வாடிக்கையாளர்களால் சமர்ப்பிக்கப்படும் திட்ட முன்மொழிவுகளை வங்கிகள் எவ்வாறு ஒப்புக்கொள்கின்றன என்பதைப் போலவே இதுவும் இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இதற்கு முன்னர் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்ற போது, அஜித் நிவாட் கப்ரால் மற்றும் பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதாகக் குறிப்பிட்ட அவர், கைச்சாத்திட திட்டமிடப்பட்ட நாளில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதாக ஹர்ஷ எம்.பி மேலும் தெரிவித்தார்.

# யாழில் கூலிக்கு யாசகம் பெற்றவர்கள் கைது

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றின் உரிமையாளர், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை கூலிக்கு அமர்த்தி யாசகம் பெறுவதாக தகவல்கள் கிடைத்திருந்தன.

அதனடிப்படையில், யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் யாசகம் செய்வோர், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் சாவகச்சேரி நகரில் யாசகம் பெற்றுக்கொண்டிருந்தவர்கள் நேற்று (21) கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு யாசகம் பெறுபவர்களின் பணம் விடுதி உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதும் யாசகத்தில் ஈடுப்பட்டோருக்கு தினக் கூலி வழங்கப்படுவதாக பல தரப்பினராலும் குற்றச்சாட்டப்பட்டது.

அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை திசைதிருப்ப கடும் முயற்சி

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் தொடர்பான மனுவில் ஷானி அபேசேகர முன்வைத்துள்ள கருத்துகள் தொடர்பாக ஆராய்கின்ற போது, அரசாங்கம் வழமை போன்று உண்மையை மறைத்து பொய்யை சமூகமயப்படுத்துவதற்கு தயாராகி வருவதாகத் தெரிகிறது.

இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான அடிப்படை, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்த அறிக்கையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட பெயர் குறிப்பிடாத மனுவாகுமென ஷானி அபேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது மனுவில் அபேசேகர கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் முக்கியமானவையாகும். தன்னுடைய விசாரணை நடவடிக்கைகளுக்கு புலனாய்வு அதிகாரிகளின் உதவி முறையாக கிடைக்காமல் போனமை, புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை வேண்டுமென்றே தடுப்பது மற்றும் விசாரணையை நிறுத்தக் கோரி அழுத்தம் கொடுத்த விவரங்கள் தொடர்பாக விரிவாக கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தின் உண்மை விவரங்களை அரசாங்கம் வேண்டுமென்றே மறைக்கிறது, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறுகிறார். இன்று அரசாங்கத்தை மட்டுமல்ல சட்டமா அதிபர் திணைக்களத்தையும் நம்ப முடியாதென கர்தினால் தெரிவித்துள்ளார்.

உண்மையான குற்றவாளிகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவான விடயமாகும். இவ்வாறு வெளிப்படுத்துவதால் அது அரசாங்கத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

அபேசேகரவின் மனுவின்படி, தேசிய புலனாய்வு சேவை மற்றும் இராணுவ புலனாய்வு சேவையின் சில உறுப்பினர்கள் மற்றும் சஹ்ரானின் உறுப்பினர்களுக்கும் இடையில் தொடர்பு உள்ளது என்பதும் அம்பலமாகியுள்ளது. சஹ்ரானை கைது செய்ய உதவாமல் சில வழக்குகளில் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தவறாக வழிநடத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# பிரதான சுட்டெண்கள் சரிவு

அண்மை வாரங்களில் தொடர்ச்சியாக உயர்ந்த பெறுமதிகளைப் பதிவு செய்திருந்த கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, 4.47 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்ததில் பட்டியலிடப்பட்டுள்ள சில நிறுவனங்களின் பங்குகளின் விலைகளில் பாரிய வீழ்ச்சி பதிவாகியிருந்தமை பிரதான காரணமாக அமைந்திருந்ததென பங்குத் தரகர் ஒருவர் குறிப்பிட்டார்.

அண்மைக் காலங்களில் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட குறிப்பிட்ட சில நிறுவனங்களின் பங்குகளின் விலைகள் அசாதாரணமாக வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன. குறிப்பாக முகப்புப் பெறுமதி 14 ரூபாயாக காணப்பட்ட பங்குகள் 290 ரூபாய் வரை உயர்ந்திருந்தன. இவ்வாறு அசாதாரணமான உயர்வைப் பதிவு செய்த பங்குகளின் விலைகளில் திடீரென வீழ்ச்சி பதிவாகியிருந்த நிலையில், அதன் தாக்கம் சந்தையின் பிரதான சுட்டிகளில் பிரதிபலித்திருந்தன.

எக்ஸ்போ லங்கா, பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ், LOFC ஃபினான்ஸ் ஆகிய பங்குகள் நேற்றைய தினம் அதிகளவு கைமாறியிருந்தன. டொல்ஃபின் ஹோட்டல்ஸ், கொத்மலே ஹோல்டிங்ஸ், ஒரியன்ட் ஃபினான்ஸ், சதொச மோட்டர்ஸ் பிஎல்சி, கஹாவத்த பிளான்டேஷன்ஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு விலை உயர்வை பதிவு செய்திருந்தன.

# சுகாதார சட்டங்களை நீக்க முடியும்

எனவே, பூஸ்டர் தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, முந்தைய சுகாதார நிலைமைகளைக் கொண்ட வயதுக்கு வந்தவர்கள், கொரோனா வைரஸ் தொடர்பான சிக்கல்களை உருவாக்கும் அபாயத்தில் இருக்கக்கூடும் என்றும் அவர்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றிருந்தாலும் கூட மரணத்துக்கு வழிவகுக்கும் என்றும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று (21) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட வயதுக்கு வந்தவர்கள் உடனடியாக வைத்திய சிகிச்சை பெறுவது மிகவும் அவசியமானது என வலியுறுத்தினார்.

அதிக ஆபத்துள்ள பிரிவில் உள்ளவர்கள், 60 வயது நிரம்பியவர்கள் அல்லது ஏற்கெனவே இருக்கும் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் கொரோனா தொற்றியுள்ளதா என்பதைத் துல்லியமாகக் கண்டறிந்து சிகிச்சை பெறுவது அவசியம் என்று குறிப்பிட்டார்.

# "டொலர் பிரச்சினையைத் தீர்க்க டொலரை கடன் பெறவேண்டும்"

அதுமாத்திமன்றி இதனைச் செய்ய வேண்டும். அதனை செய்யக் கூடாது என சட்டமும் விதிப்பார்கள். எனவே இவை அனைத்தும் எமது நாட்டின் மக்கள் வாழ்க்கையை அதிகம் பாதிக்கும் என்றார்.

எனவே டொலர்களை சம்பாதிக்க விரைவாகவும் முறையாகவும் செயற்பட வேண்டும் என தெரிவித்த அவர், இதற்காக எமது சுற்றுலாத்துறை, ஏற்றுமதி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் அதிகம் முக்கியதுவத்தை வழங்கி செயற்படுகின்றது.

அதேப்போல் இறக்குமதியையும் குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதால் இதனூடாக சில நிவாரணங்கள் கிடைக்கின்றன. அதேப்போல் அத்தியாவசியமற்ற சகலவற்றையும் முடிந்தவரை நிறுத்த வேண்டும் என்றார்.

# 2 விமானங்களை இலவசமாக வழங்குகிறது அமெரிக்கா

தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் வேண்டுகோளுக்கமைய, இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் கடல்சார் கண்காணிப்பு திறனை வலுப்படுத்துவதற்காக 2 விமானங்களை விமானப்படைக்கு வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டெக்ஸ்ட்ரான் ஏவியேஷன் தயாரித்த பீச்கிராஃப்ட் 360ஈஆர் இரட்டை-டர்போபிராப் விமானத்தை விமானப்படை கோரியிருந்ததாகத் தெரிவித்தார்.

இது அமெரிக்காவிலுள்ள ஃபெடரல் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் மற்றும் ஐரோப்பிய விமானப் பாதுகாப்பு முகவரகம் ஆகியவற்றால் சான்றளிக்கப்பட்ட இலகுரக போக்குவரத்து விமானமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை

நிகழ்நிலை ஊடாக விரிவுரைகள் நடத்தப்பட்ட போதிலும் அனைத்து பிரயோக பரீட்சைகள் மற்றும் ஏனைய பரீட்சைகள் எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை என நான்காம் கல்வி ஆண்டு மாணவர்கள் தெரிவித்தனர். தற்போதைய சூழ்நிலையில் தமது பட்டப்படிப்பை நிறைவுசெய்ய அதிக காலம் செலவிட வேண்டியேற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பேராசிரியர் சுமேத ஜயநெத்தியிடம் வினவியபோது, "மாணவர்களின் சிரேஷ்டத்துவம் அடிப்படையில் பரீட்சைகளை நடத்துவதற்கான நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன" என்றார்.

# இலங்கை, இந்திய பக்தர்களுக்கு அனுமதி

கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு இலங்கை பக்தர்கள் 500 பேருக்கு மாத்திரம் கச்சத்தீவு திருவிழாவில் கலந்துகொள்வதற்கான அனுமதியை வழங்க யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தமிழக பக்தர்களுக்கும் திருவிழாவில் பங்கேற்க சந்தர்ப்பமளிக்குமாறு தமிழக அரசாங்கம் சார்பில் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே இரு நாட்டு பக்தர்களும் மட்டுப்படுத்தப்பட்டளவில் இம்முறை திருவிழாவில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மார்ச் 29இல் விசாரணை குறித்த உத்தரவு

2016 ஆம் ஆண்டு இராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, அவரது சாரதி மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொய்யான சாட்சியங்களை சோடனை செய்தமை, சதி செய்தமை மற்றும் பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் அமைச்சர் சம்பிக்க மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணைக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரிய மனுவே, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர, எஸ்.குமாரன் ரத்னம் ஆகியோர் முன்னிலையில் நேற்று (21) எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக நோட்டீஸ் பிறப்பிப்பதா, இல்லையா என்ற உத்தரவு மார்ச் 29ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என நீதியரசர்கள் குழாம் அறிவித்தது.

# 21 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட அலைபேசி உள்ளிட்ட பிரத்தியேக உடமைகளை மீள வழங்குமாறு உத்தரவிட்ட நீதவான், விடுதலை செய்துள்ளதாக கடற்தொழில் நீரியல் வளத்துறை களத்தின் உதவிப்பணிப்பாளர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த போது, கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி 21 இந்திய மீனவர்களும் 2 இழுவைப்படகுடன் வடக்கு மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

இதன்போது கடற்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு, மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலை செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினூடாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் 04 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# 2 கப்பல்கள் 3 நாள்களாக நங்கூரமிட்டுள்ளன

இந்தக் கப்பல்களிலுள்ள எரிபொருளை உடனடி ஒழுங்கு முறையின் கீழ் அரசாங்கம் இறக்குமதி செய்த போதிலும், எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான டொலர்கள் கிடைக்காததால் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு டீசல் கப்பலும் பெற்றோல் கப்பலொன்றும் தொடர்ந்து நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டால், எரிபொருளுக்கான நிறுத்தக் கட்டணத்தை அரசாங்கம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் தற்போது பத்து நாள்களுக்கு மாத்திரமே பெற்றோலும் 7 நாள்களுக்கும் மட்டுமே டீசலும் கையிருப்பு உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாக கூறினார்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடமையிலிருந்து விலகிய லன்சா அறிக்கை வெளியிடுவார்

தனது தீர்மானத்தின் பின்னணியிலுள்ள காரணங்கள் மற்றும் தனது எதிர்கால நடவடிக்கை தொடர்பில் அவர் விளக்கமளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது அமைச்சின் கடமைகளில் இருந்து விலகி இருப்பதற்கான காரணங்களை விளக்கி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப தயாராகி வருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

# வெட்டிய மரக்கிளை விழுந்து...

தலவாக்கலை- ஹட்டன் பிரதான வீதியில் லோகி தோட்ட பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலேயே இச்சம்பவம், நேற்று (21) மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில், தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டிலிருந்து தலவாக்கலை நகருக்கு சென்றுகொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நபரை ஓட்டோவொன்றில் ஏற்றி, லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போதே அவர் உயிரிழந்துள்ளார் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோவும் சேதமடைந்துள்ளது.

வன திணைக்களத்தின் அனுமதியுடன் அந்த மரத்தின் கிளைகள் வெட்டப்பட்டுள்ளது. எனினும், உரிய பாதுகாப்பின்றி மரத்தின் கிளைகளை வெட்டியதாக விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள் அவ்விடத்தில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"200 வருடம் பழமை வாய்ந்த மரத்தினை வெட்டுவதற்கு அனுமதி கொடுத்தது யார்?" "பிரதான வீதியில் 100 ற்கு கணக்கான வாகனங்கள் செல்லும்போது உரிய பாதுகாப்பு வழங்காமல் மரத்தினை வெட்டியதால் இன்று அப்பாவி உயிர் போய்விட்டது" உள்ளிட்ட போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஹட்டன்-தலவாக்கலை பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

# இந்த அரசாங்கத்துக்கு கிறிஸ்தவர்கள் வாக்களிப்பார்களா?



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை அரசாங்கம் ஒருபோதும் கண்டுப்பிடிக்க முடியாதென தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, கிறிஸ்தவர்கள் இந்த அரசாங்கத்துக்கு வாக்களிப்பார்களா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அரசாங்கம் சில விடயங்களை அடுத்த இரு வருடங்களில் சரிசெய்து கொள்ளுவதாக தெரிவித்துள்ளது. ஆனால் அரசாங்கம் என்ன கூறினாலும் மூன்று விடயங்களை அரசாங்கத்தால் சரிசெய்யவே முடியாது என்றார்.

முதலாவது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை அரசாங்கத்தால் ஒருபோதும் கண்டுப்பிடிக்க முடியாது. எதிர்காலத்தில் அமையும் அரசாங்கத்தால் மாத்திரமே இத்தாக்குதலின் சூத்திரதாரியை கண்டுப்பிடிக்க முடியும் என கார்டினல் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளமையை அபேசிங்க, நினைவுபடுத்தினார்.

நாமும் இதனையே சொல்கிறோம். தற்போதைய அரசாங்கத்தால் சூத்திரதாரியை ஒருபோதும் கண்டுப்பிடிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் கிறிஸ்தவ மக்களே அதிகப் பாதிப்புக்குள்ளாகினர். இவ்வாறான நிலையில் இந்த அரசாங்கத்துக்கு கிறிஸ்தவ மக்கள் மீண்டும் எப்படி வாக்களிப்பார்களா? எனவும் வினவினார்.

# "என்னால் மழையை உருவாக்க முடியாது"



என்னால் மழையை உருவாக்க முடிந்தால், மழையை வரவழைத்து நாட்டின் நீர் நிலைகளை நிரப்பியிருப்பேன் என தெரிவிக்கும் அமைச்சர் மஹிந்த அமரவீர, சுற்றுலாத்துறை வழமைக்குத் திரும்பும்போது நாட்டில் மின்சாரத் தடை ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "என்னால் மழையை உருவாக்க முடியுமாக இருந்தால். இந்நேரம் மழையை வரவழைத்து நாட்டிலுள்ள நீர்மட்டங்களை நிரப்பியிருப்பேன். நாட்டில் உள்ள நீர் நிலைகளின் நீர் மட்டங்கள் குறைவடைந்துள்ளதாலேயே தற்போது மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது." என்றார்.

நாட்டில் நடக்கும் பல விடயங்களை கடவுளின் பொறுப்பில் விட்டுவிட வேண்டியிருக்கிறது. மழையை எம்மால் உருவாக்க முடியாது. மழை பெய்து நீர் நிலைகளில் நீர் நிரம்பினால் மின்சாரத்துக்கு செலவிடும் நிதிகளை சேமிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதனூடாக தொடர்ந்து மின்சாரத்தை வழங்கவும் முடியும். சுற்றுலாத்துறை மீண்டும் வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கும் போது நாட்டில் மின்சாரத் தடை ஏற்படுகிறது. எல்லா ஹோட்டல்களிலும் ஜெனரேட்டர்கள் இருப்பதில்லை எனவும் கூறினார்.

# சஜித்தின் பேச்சு நகைப்புக்குரியது




தங்களது கட்சியில் உள்ள ஊழல்வாதிகளைக்கூட தண்டிக்க முடியாத ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவரது ஆட்சியமைந்தால் குற்றவாளிகளை தண்டிப்பதாகக் கூறுவது நகைப்புக்குரியது என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொள்ளையர்கள் தண்டிக்கப்படுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறும்போது, அவருக்கப் பின்னால் அக்கட்சியில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தூக்கும் வந்துவிடுவதாக தெரிவித்தார்.

குற்றவாளிகளை தண்டிப்பதாக இருந்தால், சஜித் பிரேமதாஸ முதலில் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள ஊழல்வாதிகளை விரட்டியத்து காட்ட வேண்டும். அதனை சஜித்தால் செய்ய முடியுமா? அதனை ஒருபோதும் அவரால் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

தங்களது கட்சியில் உள்ளவர்களை கூட தண்டிக்க முடியாத சஜித் பிரேமதாஸ, மக்கள் கூட்டங்களுக்கு சென்று கொள்ளையர்களை தண்டிப்பதாக பேசுவது உண்மையில் நகைப்புக்குரியது எனவும் தெரிவித்தார்.








## நீர்கொழும்பில் எரிபொருள் தட்டுப்பாடு..

நீர்கொழும்பில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரும்பாலானவற்றில் நேற்று (21) எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. (படங்கள் - ஷாஜஹான்)

### கொள்ளையர்களே

# தண்டிக்க எங்களால் மாத்திரமே முடியும்



கொள்ளையடிப்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, கொள்ளையர்களை தண்டிக்கக்கூடிய தலைவர் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இராணுவ வீரர்களை பற்றி பேசிப் பேசியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசாங்கத்துக்கு இராணுவ வீரர்கள் மீது புதுவிதமானக் காதல் இருந்தது என்றார்.

ஆனால், ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அந்த காதலுக்கு என்னவானது எனவும் கேள்வி எழுப்பிய நளின் பண்டார எம்.பி, நாட்டு மக்கள் பல்வேறு துயரங்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையிலும் கூட கொள்ளையடிப்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது எனவும் தெரிவித்தார்.

இதுபோன்ற கொள்ளையர்களை தண்டிக்கக்கூடிய தலைவர் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருப்பதாகவும், கொள்ளையர்களை யாரால் பிடிக்க முடியும்? பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவாலா? அல்லது தேசிய மக்கள் சக்தியினராலா? எனவும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

### பாராளுமன்ற குழுக்கள் பல

# இவ்வாரம் கூடுகின்றன

அமைச்சுசார் ஆலோசணைக்குழுக்கள் உள்ளிட்ட பல பாராளுமன்றக் குழுக்கள் இவ்வாரம் கூடவுள்ளன.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்த்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு, எதிர்வரும் 24 ஆம் திகதி கூடவுள்ளது.

மேலும், வலுசக்தி , விவசாயம், , வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்கள் என்பன இன்று (22) கூடவுள்ளன. தொழில் அமைச்சுசார், காணி அமைச்சுசார் ஆலோசனைக்குழுகள் நாளை (23 கூடவுள்ளன. இதேவேளை, பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் கூட்டமும் இன்று (22) நடைபெறவுள்ளது.



### சிரேஷ்ட ஊடகவியலாளர்

# கமலின் இறுதி கிரியை இன்று



இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் (SLPI) மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (PCCSL) ஆகியவற்றில் பணியாற்றிய நிலையில் திடீரென மரணமடைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் கமல் லியனாராச்சியின் (kamal liyanarachchi) இறுதி கிரியை பயாகலவில் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர், நேற்று முன்தினம் (20) இரவு காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரது குடும்பத்தினருக்கு தமிழ்மிரர் திணைக்களத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

# முஸ்லிம் தனியார் சட்டங்கள் குறித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

*ரஸீன் ரஸ்மின்*






இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டங்கள் தொடர்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் புத்தளம் - கொழும்பு முகத்திடலில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

புத்தளத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள், யுவதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த கவனயீர்ப்பில் கலந்துகொண்டனர்.

தனியார் சட்டம் (முஸ்லிம் திருமண, விவாகரத்து சட்டம்) எமது அடிப்படை உரிமை எனும் தொனிப்பொருளில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து தனியார் சட்டத்தால் ஆளப்பட வேண்டும்", "சிறுபான்மையினரின் மத சுதந்திரத்தை அழிக்காதே", "முஸ்லிம்களின் திருமண சட்டம் அடிப்படை உரிமை" தனியார் சட்டத்தை நீக்குவது யாப்புக்கு முரணானது" போன்ற வாசகங்கள் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சர்வதேச மனித உரிமை இயக்கங்கள் அமைப்பின் இலங்கைக்கான ஊடக ஒருங்கிணைப்பாளர் மஹ்ரூப் முஹம்மது ரிஸ்வியிடம் மகஜர் ஒன்றும் இதன்போத ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது.



# பாராளுமன்றத்தில் கொரோனா அதிகரிக்கிறது

பாராளுமன்ற பணியாட் தொகுதியினரில் மேலும் 11 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக படைக்கள சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற பணியாட் தொகுதியைச் சேர்ந்த 75 பேருக்கு நேற்று முன்தினம் (20) மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அண்டிஜன் பரிசோதனையிலேயே 11 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பாராளுமன்றத்தில் கொரோனா வைரஸின் பரவல் குறைவடைந்துள்ளதாக பாராளுமன்ற படைக்கள சேவிதர் மேலும் தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளான 11 ஊழியர்களும் தங்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். பாராளுமன்றத்தில் கடந்த சில வாரங்களாக நூற்றுக்கும் அதிகமானோருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் 54 பேருக்கும் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் நேற்றும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுப்பு

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் இன்றும் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - மருதனார்மடம் மற்றும் சுன்னாகம் பகுதிகளில் நேற்றுக் காலை இலங்கை தமிரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்றைய கையெழுத்து போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன் மற்றும் கே.சயந்தன், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சுகிர்தன், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எஸ்.பிரகாஸ், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



அம்பாறையில்

# புதிய கட்சி தொடங்க முனைப்பு

■ நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்டத்தில் விரைவில் புதிய கட்சியைத் தொடங்கவுள்ளதாக நாபீர் பௌண்டேஷன் தவிசாளர் கலாநிதி உதுமானக்கண்டு நாபிர் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், “அம்பாறை மாவட்டத்தில் அரசியல் அறிவு ரீதியாக பாரிய பின்னடைவு இருக்கிறது. அதனால் எமது மக்களுக்கு எவ்வாறான அரசியல் தலைமைத்துவங்களை உருவாக்கலாம் என்பது தொடர்பில் நாபீர் பௌண்டேஷன் ஊடாக ஒவ்வோர் ஊருக்கும் சென்று சமூக அமைப்புகளை நாடி, தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்.




“அதனூடாக, அம்பாறை மக்களுக்கு ரிஷாட், ஹக்கீம், அதாஉல்லாஹ் போன்றவர்களால் எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை என்பதை அறிந்துள்ளோம்.

“அரசியல் செய்வது, தேர்தல் நடத்துவது எல்லாம் மக்களின் நன்மைக்கே! கடந்த காலங்களில் நாங்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பல வேலைத்திட்டங்களை செய்து வந்தோம்.

“நாபீர் பௌண்டேஷன் இயங்கிவந்த எங்களின் அமைப்பை, எதிர்வரும் தேர்தல் காலங்களில் அரசியல் கட்சியாக மாற்றியமைத்து, பொதுத் தேர்தல், மாகாண சபை தேர்தல், உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஆகியவற்றில் களமிறங்கத் தயாராகி வருகிறோம். கூட்டிணைந்தா அல்லது தனித்தா என்பதை காலமே தீர்மானிக்கும்” என்றார்.

முன்பள்ளி ஆசிரியர்களால்

# யாழ். மாவட்ட செயலகம் முற்றுகை

■ என்.ராஜ், எம்.றொசாந்த், விஜயரத்தினம் சரவணன்

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில், நேற்று (21) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கப்படும் 6,000 ரூபாய் கொடுப்பனவை அதிகரிக்க கோரியும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும், நீண்ட காலமாக தாம் குறைந்த சம்பளத்துடன் சேவையாற்றி வருவதாகவும், தமக்கு இந்த அரசாங்கம் உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அங்கு வருகைதந்த மாவட்டச் செயலாளரிடம், முன்பள்ளி ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளையும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் முன்வைத்ததுடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் மாவட்ட செயலாளரிடம் கையளித்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வருகை தந்து தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.







மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும்

# ஆவணம் கையளிப்பு

■ வடமலை ராஜ்குமார், அ.அச்சுதன்

திருகோணமலையில், ‘நீதிக்காக எங்கள் குரல்’ எனும் தொனிப்பொருளில் பெண்களால் முன்னெடுக்கப்படுகின்ற மனித உரிமைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கல்லூரி வீதியில் அமைந்துள்ள ஜூப்லி மண்டபத்தில் நேற்று (21) நடைபெற்றது.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை மேம்படுத்துவதற்காக, திருகோணமலை மாவட்ட பெண்களை முன்னிறுத்தி ஆய்வுகள் செய்யப்பட்டன.

ஆய்வின் இறுதியாக பெண் மாற்றுத் திறனாளிகளின் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் அவற்றுக்கான தீர்வுகள் அடங்கிய ஆவணம், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர். எஸ்.மதிவண்ணன், திருகோணமலை மாவட்ட செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஜீ. சுகந்தினி ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடல், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம், அமரா பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், இளையோர் தன்னார்வ அமைப்பினரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு தனியான ஆணைக்குழு உருவாக்கப்பட்டு, அவர்களின் உரிமைகள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். இவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்படுவது உண்மைத்தன்மையுடன் பரவலாக்கப்பட வேண்டும். பலர் பொய்யான தகவல்களுடன் பல சலுகைகளை அனுபவித்து வருவதனை எங்களது புலங்களில் காண்கின்றோம்.

புதிய கொள்கைகள் நடைமுறைக்கேற்ப வரையப்படவேண்டும். அவை சட்டங்களாக உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பெண் மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அவை மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும். அவர்களது கருத்துச் சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





காரைதீவில்

# கையெழுத்து வேட்டை

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி, நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் நேற்று முன்தினம் (20) கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

இக் கையெழுத்துப் போராட்டமானது, காரைதீவு பொதுச் சந்தை, கல்முனை பகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி ஏற்பாட்டில் நடைபெற்றது.

காரைதீவு பொதுச் சந்தைக்கு அருகில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்துக்கு, இலங்கை தமிழரசு கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமைதாங்கினார்.

கல்முனையில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் தலைமை தாங்கினர்.

இதன்போது, த.தே.கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா. சிறிநேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

“உங்கள் ஒவ்வொருவரினதும் கையொப்பங்களும் உங்கள் பாதுகாப்புக்கானதும் உங்கள் சந்ததியின் பாதுகாப்புக்கானதும் ஆகும்” என இப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், தத்தமது உரையில் குறிப்பிட்டனர்.







ஊடகத்துறையில் 50 வருடங்கள் நீடிப்பு;

# தில்லைநாதனுக்கு பாராட்டு விழா

ஊடகத்துறையில் 50 வருடங்கள் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி, பொன் விழாக் கண்ட வடமராட்சியைச் சேர்ந்த எஸ்.தில்லைநாதனுக்கு, அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் பாராட்டு விழா நடத்தியது.

இவ் விழாவில் காலைக்கதிர் பிரதம ஆசிரியர் ந.வித்தியாதரன், யாழ். ஊடக அமையத்தின் ஆலோசகர் இதயாபரன், பத்திரிகையாளர் திருமதி சரஸ்வதி சுகிர்தராஜ், தலைமை வகித்த வேணுகானன் ஆகியோர், தில்லைநாதனுக்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து பாராட்டினர்.

# மாட்டு வண்டியில் சிக்கிய மோட்டார் சைக்கிள்

## இளைஞன் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் - மாட்டு வண்டி விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூளாய் பகுதியை சேர்ந்த சின்னையா லோகேஸ்வரன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குறித்த இளைஞன், யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட நிலையில் , சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (20) இரவு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ரயிலில் மோதி பெண் பலி

■ எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் மோதி பெண்ணொருவர் மரணித்துள்ளார் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் சந்திவெளி பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (20) இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்துள்ள பெண் தொடர்பான விவரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும், அவர் 40 வயது மதிக்கத்தக்கவர் என்றும் பெண்ணின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் விபத்தா அல்லது தற்கொலையா எனும் கோணத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



பணத்துக்கு சூது

# விளையாடியவர்கள் தப்பியோட்டம்

■ எப்.முபாரக்

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பணத்துக்கு சூது விளையாடிய இடமொன்றை முற்றுகையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேராறு பகுதியில் நேற்று முன்தினம் (20) மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, சூது விளையாடிய இடம் முற்றுகையிடப்பட்டது.சந்தேகநபர்கள், பொலிஸாரை கண்டு 5,000 ரூபாய் பணத்தையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சூது விளையாடிய இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளையும் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றி, கந்தளாய் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

புதுக்குடியிருப்பில்

# சட்டவிரோத மணல் அகழ்வு

## ஆறு சாரதிகள் கைது

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர், உழவு இயந்திரங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நாள்களாக புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம், கைவேலி, தேவிபுரம் பகுதிகளில் முறையற்ற அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர்களும் 2 உழவுஇயந்திரங்கள் உட்பட அதன் சாரதிகளும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்ப்பட்ட சாரதிகள், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளதுடன், மணல் ஏற்றிய வாகனங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.



கைதானவர்களும் மற்றும் மண் ஏற்றிய வாகனங்களும் இன்று (22) முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல் ஏற்றும் வாகனங்கள், திருகோணமலை-யாழ்ப்பாணம் வீதிபோக்குவரத்து அனுமதியை பயன்படுத்தி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

யாழில் ஆறு மாதங்களுக்குப் பின்னர்

# சிக்கிய இளைஞன்

■ எம்.றொசாந்த்



வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டு 6 மாதங்கள் தலைமறைவாக இருந்த இளைஞன், யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த 22 வயதுடையவரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

“கோப்பாய், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற 6 வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என சந்தேகநபர் 6 மாதங்களாகத் தேடப்பட்டு வந்தார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (20) இவர் கைது செய்யப்பட்டார்” என்றும் பொலிஸார் கூறினர். சந்தேகநபர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தபட்டுள்ளார்.

வட்டவளையில்

# சிறுவன் துஷ்பிரயோகம்; பிக்கு கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வட்டவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் 13 வயதான சிறுவனை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அப்பிரதேசத்தில் உள்ள விஹாரையொன்றின் விஹாராதிபதி நேற்று (21) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர், வட்டவளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, சந்தேகத்தின் பேரில் விஹாராதிபதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விஹாரைக்குள் அழைத்துச் சென்றே, அச்சிறுவனை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவன், டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்தியரிடம் பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிக்கு, ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.



# வரட்சியால் வற்றிப்போகும் நீர்த்தேக்கங்கள்

## நீர்மின் உற்பத்திக்கும் பாதிப்பு

■ மலைவாஞ்ஞன், மொஹமட் ஆஸிக்

மலையகத்திலுள்ள பெரும்பாலான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வரட்சியால் குறைவடைந்து உள்ளதுடன், சில நீர்த்தேக்கங்கள் வற்றிப் போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசிய நீர்மின் உற்பத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வரும் நீர்த்தேக்கங்களின் ஒன்றான காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் இதுவரை சுமார் 24.3 சதவீதம் தாழிறங்கியுள்ளதாக மின்சார சபை பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.



அத்துடன், மவுசாகலை நீர்த்தேக்கத்தில் 47 சதவீதம் வரையும்,மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் 49.1 சதவீதம் வரையுமே தற்போது நீர் சேமிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் மிகவேகமாக குறைந்துள்ளதால் நீரில் மூழ்கியிருந்த கோவில், ஏனைய கட்டட இடிபாடுகள் வெளியே தென்பட ஆரம்பித்துள்ளன. இதேவேளை, விக்டோரியா நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

நீர் மின் உற்பத்திக்காக நீரை விநியோகிக்கும் நீர்த்தேக்கமாக விக்டோரியா நீர்த்தேக்கம் திகழ்ந்தாலும் தற்போது நிலவுகின்ற நீர் பற்றாக்குறை காரணமாக மின் உற்பத்திக்காகவோ, விவசாயத்துக்காககவோ நீரை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# புதிய நிர்வாகிகள்

■ எம். செல்வராஜா, மலர்வேந்தன்

பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை (19) நடைபெற்றது.

இதன்போது நடப்பு வருடத்தின் மன்றத் தலைவராக என். செல்வராஜ், செயலாளராக ஆர். கிருஸ்ணமூர்த்தி, பொருளாளராக வீ. சூரியகுமார் ஆகியோர் தெரிவாகினர்.

கினிகத்தேனையில்

# மகளிரை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்



■ இரா.யோகேசன்

மகளிரை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியால் ஒழுங்கமைக்கப்பட்ட சந்திப்பொன்று, அம்பகமுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜெயசங்க பெரேராவின் தலைமையில், அம்பகமுவ பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

வனவிலங்கு மற்றும் வனத்துறை பாதுகாப்பு அமைச்சர் சி. பீ.ரத்நாயக்கவின் அனுசரனையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இந்நிகழ்வில், போக்குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கலந்துக்கொண்டார்.







## நூறுகோடி மக்களின் எழுச்சி

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் 'நூறுகோடி மக்களின் எழுச்சி' இம்முறை, நோர்வூட் மைதானத்தில் நடைபெற்றது.

'வன்முறைகள் இல்லாது வாழ்தல்; பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும்' என்ற தொனிப்பொருளில் அரச சார்பற்ற நிறுவனமான சமூக நல்வழி மன்றத்தின் பிரதான பொறுப்பாளர் திருமதி. சந்திரமதியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

எம். கிருஸ்ணா

# பதுளையில் டீசலுக்குத் தட்டுப்பாடு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை நகரிலுள்ள எரிபொருள் நிலையங்களில் டீசலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததுடன், எரிபொருள் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் வாகனங்களும் நேற்று (21) நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன், எரிபொருள் நிலையங்களில் 'டீசல் இல்லை' என்ற அறிவிப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பதுளை பல்நோக்கு கூட்டுறவு நிலையத்துக்குரிய எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு தொடர்ச்சியாக எரிபொருள் கிடைக்கப்பெற்றாலும் அவை அரச நிறுவனங்களுக்குரிய வாகனங்கள் மற்றும் அத்தியாவசிய சேவை வாகனங்களுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்து எரிபொருள் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



"பயணிகள் பஸ் போக்குவரத்து சேவைகளுக்கு இதுவரை எவ்வித எரிபொருள் சிக்கலும் ஏற்படவில்லை. சில தனியார் வாகன உரிமையாளர்களுக்கே எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்று ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் கே. சுசில்குமார தெரிவித்துள்ளார்.

புளத்கொஹுபிட்டியவில்

# குடிநீரின்றி பல குடும்பங்கள் அவதி



■ என்.ஆராச்சி

தற்போது நாட்டின் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ள வரட்சியான வானிலையால் பல பிரதேசங்களிலும் குடிநீருக்குத் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் சுமார் 600 குடும்பங்கள் குடிநீரின்றி அவதிப்படுவதாக புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் ரம்யா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கபகமுவ, புஸ்பனே, கனன்கமுவ, கெடியமுல்ல, வேகல்ல ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே குடிநீரின்றி அவதியுறுவதாகவும் அவர்களுக்குத் தேவையான நீர், பவுசர் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் பவுசர் மூலம் குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



கட்சியின் மந்தகதியான செயற்பாட்டால்

# கட்சி தாவிய பிரதேச சபை உறுப்பினர்

■ நீலமேகம் பிரசாந்த்

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் கொத்மலை பிரதேசபை உறுப்பினர் ஆர்.நகுலேஷ்வரன், தொழிலாளர் தேசிய சங்கத்தோடு இணைந்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இவர், நேற்றுமுன்தினம் (20) உத்தியோகபூர்வமாக தொழிலாளர் தேசிய சங்கத்தோடு இணைந்து கொண்டார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித்தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராமான எம். உதயகுமாரை சந்தித்து, தன் உத்தியோகபூர்வ இணைவை அறிவித்தார்.

இது தொடர்பில் ஆர்.நகுலேஷ்வரன் தெரிவித்ததாவது: அண்மைக்காலமாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மந்தகதியான போக்கே தான் மாற்றுக்கட்சிக்கு செல்வதற்கான காரணமெனவும் குறிப்பிட்டார்.

இந்த ஆட்சியில் எல்லோரும் கண்ட கனவு

# பகல் கனவாகத்தான் மாறியுள்ளது

## எம்.உதயகுமார் தெரிவிப்பு

■ மலைவாஞ்ஞன்

ஆட்சிக்கு வரும் போது, பலர் அவர் கண்ட கனவு நனவாகிறது; இவர் கண்ட கனவு நனவாகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இப்போது எல்லோரும் கண்ட கனவு, பகல் கனவாக மாறியுள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உபதலைவருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

கொட்டகலை, போகாவத்த பகுதியில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,



மலையகத்தைப் பொறுத்த வரையில், திகாம்பரம் அமைச்சராக இருந்த போது, மலையக மக்களுக்கு பாரிய அளவில் சேவை செய்தார். மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுத்தார். ஆனால், அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் ஒரு வீடமைப்பு திட்டத்தைக் கூட ஆரம்பிக்கவில்லை. மாறாக கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் சிறந்த முறையில் சேவையாற்றியதற்காக மலைநாட்டு புதிய கிராமங்கள் வீடமைப்பு அமைச்சுக்கு விருது கிடைத்தது. ஆனால், இப்போது விருது வழங்க வேண்டும் என்றால் வேலை செய்யாமைக்காகவே விருது வழங்க வேண்டும் என்றார்.

இன்று பொருளாதார நெருக்கடி காரணமாக, மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று வேளை சாப்பிட முடியாது மிகவும் துன்பப்படுகின்றனர். ஆனால், இன்றுள்ளவர்கள் உல்லாச பூங்கா அமைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றார்.

# வீண் செலவுகளுக்குப் பின்னர் அவசர கட்டுப்பாட்டின் அவசியம்

மாதாந்தச் சம்பளத்தில் வாழ்க்கை நடத்தும் குடும்பங்களில் ஒருசில, மாதச் செலவை சரியாகத் திட்டமிட்டுக் கொள்ளும். மாதத்தின் இறுதியில் செலவு கையைக் கடிக்கும் போது, கடன்களைப் பெற்று, செலவை சமாளித்துக்கொள்வர். திட்டமிடாது வீண் செலவுகளைச் செய்வோர், அடுத்த மாதம் சம்பளம் பெற்ற மறுநாளே, கடனாளியாகிவிடுவர்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் சில திட்டமிடாத செலவுகளுக்குப் பின்னர், கடன்களுக்காக கையேந்திக்கொண்டிருக்கின்றது. கடந்த சுதந்திர தினத்தன்று, வானில் கரணமடித்து சாகசம் காண்பித்த விமானங்களுக்காகவும் அதன் ஒத்திகையின் போதும் செலவிடப்பட்ட எரிபொருளை மீதப்படுத்தியிருந்தால், ஓரளவுக்கேனும் கையேந்தாமல் இருந்திருக்கலாமென எதிரணியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆக, சுதந்திர தின ஒத்திகையின் போதும் சுதந்திர தினத்தன்றும் செலவிடப்பட்ட எரிபொருளுக்காக கடன்பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்பட்டுள்ளதென முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை ஏறெடுத்துப்பார்க்க வேண்டும். இதற்கிடையில்தான், அரச நிறுவனங்களுக்கு அவசர கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு அரச வாகனங்களைப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனினும், மத்திய அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவின் போது, பவனிவந்த வாகனங்களை படம்பிடித்து, சமூக வலைத்தளங்களில் தரவேற்றியிருந்தவர்கள், 'செலவைக் கட்டுப்படுத்துமாறு விடுக்கப்படும் அறிவுரைகள், சகலருக்கும் சமமானதாக இருக்கவேண்டும்' என, கருத்துகளை பதிவு செய்துள்ளனர்.

தீர்மானம் சகலருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டுமே தவிர, தாங்கள் சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு, சாதாரண பிரஜைகள் கட்டுப்பாடுகளுடன் வாழவேண்டுமென வலியுறுத்துவது எந்தளவுக்குச் சாத்தியமானது? ஆடம்பரமாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு பிரிவினர், சாதாரண பொதுமக்களிடமும் கீழ்நிலை அதிகாரிகளிடமும் 'வயிற்றைக் கட்டி'க்கொள்ளுமாறு கோருவதில் நியாயமில்லை. எனினும், அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு மானிய எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் நிகழ்நிலையின் (சூம்) ஊடாக சாதாரண கூட்டங்களேனும் நடத்தப்படவில்லை என்பது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் சுற்றறிக்கையின் ஊடாக அம்பலமாக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் நாடு முடக்கப்பட்ட காலத்திலேயே, பாடசாலைகள், மேலதிக வகுப்புகள், கூட்டங்கள், சர்வதேச மாநாடுகள் கூட, 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்பட்டுள்ளன. ஆனால், அரச நிறுவனங்கள் பல, காலங்கடந்த ஞானமாக செயற்படுகின்றன என்பதுதான் கவலையான விடயமாகும். எரிபொருள் சிக்கனம் மட்டுமன்றி மின்பாவனை சிக்கனம் தொடர்பிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் பலரும் தாங்கள் பயன்படுத்தும், உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கான மின் கட்டணத்தை இன்னுமே செலுத்தவில்லையென அண்மைய காலத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன. அவ்வாறு கட்டணம் செலுத்தாதவர்களில் ஒவ்வொருவரும் இலட்சக்கணக்கில் செலுத்தவேண்டுமென அதில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மோசடி செய்தல், வீணான செலவுகளைச் செய்தல் அதற்கு பின்னர் பிறக்கும் ஞானத்தால் பாரிய மாற்றங்கள் ஏற்படுமென நினைப்பதுதான் முட்டாள்தனமானது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

மூளையை விரித்துப் பேச்சைச் சுருக்கு! பேசும்போது புத்தியை ஒதுக்கி, பேச்சை வளர்த்தால், துன்பங்கள் சூழலாம். எனவே, எப்பொழுதும் தங்களை மறந்து வார்த்தைகளை வெளியே விடலாகாது.

பகைமை அளவுக்கு மீறனால் பெரும்பாலும் ஆவேசப்பேச்சுகளே தானாக உருவாகின்றன. பொறுமை, நிதானம் இன்றி வாழ்வது எவரையும் நிம்மதியுடன் இயங்கவிடாது.

இத்தகைய குணாதிசயங்களால் உறவுகள் கத்தரிக்கப்படுகின்றன. கோபம், ரோசம் எல்லாமே, தங்களுக்கே உரியது என்று பலர் நினைப்பதுண்டு.

"நான் ஒரு கோபக்காரன்" என வீம்புடன் சொல்பவர்கள் இருக்கிறார்கள். யாவரையும் வெறுக்காமல், தோழமையுடன் இணைவதன் சந்தோஷங்களை உணராமல், பகைமையுடன் வாழ்வது முட்டாள் தனமானது.

தன்னைத்தானே இழந்து, தீப்பிழம்பாக உருவாகுவதை, சமூகத்தில் எவருமே ஏற்கமாட்டார்கள்.

அன்பாகப் பேசுபவர்களைச் சுற்றி ஒரு கூட்டமே இணைந்திருக்கும். அழகான வார்த்தைகள் அமிர்தம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம் அரசியல்வாதிகள் சமூகத்துக்காக

# சிந்திப்பதும் சந்திப்பதும் எப்போது?

மொஹமட் பாதுஷா

நாட்டு மக்கள், பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் இப்போது முகம் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு குடும்பமும், சுகாதார நெருக்கடியில் இருந்து படிப்படியாக மீண்டு, பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்திருக்கின்றது. இதில் மறைப்பதற்கு எதுவுமில்லை.

இதற்கிடையில், தேசிய அரசியலில் ஏற்பட்டிருக்கின்ற குழப்பங்களும் மக்களைப் பலிக்கடாவாக்கும் நகர்வுகளும் இன, மத பேதங்கள் கடந்து, எல்லா மக்கள் மத்தியிலும் ஒருவித எரிச்சலையும் விசனத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

பெரும்பான்மையின மக்களுக்கான அரசியலை, பெருந்தேசியக் கட்சிகள் செய்து கொண்டுதான் இருக்கின்றன. சிங்களவர்களின் இன, மத ரீதியான விடயங்கள், உரிமைகள் தொடர்பில் எந்தவோர் அமைப்பும் சிவில் சமூகமும் கவனம் செலுத்தாவிட்டால் கூட, அப்பணியை ஆட்சியாளர்கள் தமது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கி இருப்பார்கள் என்பதை, வரலாறு நெடுகிலும் கண்டுணர்ந்து வருகின்றோம்.

அதேபோல், தமிழ்த் தேசிய அரசியலும் எல்லாக் காலத்திலும் உயிரோட்டமாகவே இருந்து வருகின்றது. தமிழ் அரசியல்வாதிகளின் போக்குகள், தீர்மானங்கள் சிலபோதுகளில் விமர்சனத்துக்கு உரியவையாக இருந்திருக்கலாம். ஆனால், ஏதோ ஒருவகையில் அந்த மக்களின் உரிமைக்காக அவர்கள் குரல்கொடுத்து வருகின்றார்கள் என்பதை மறுக்க முடியாது.

ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம் அரசியல் மற்றும் சிவில் சமூகத்தின் செயற்பாடுகள் பூச்சியமாகவே இருக்கக் காண்கின்றோம். முஸ்லிம்களின் பிரச்சினைகள், எதிர்பார்ப்புகள் தொடர்பாக, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகள் குரல் கொடுப்பதும் இல்லை. ஜம்மியத்துல் உலமா சபை போன்ற மத அமைப்புகளோ, சிவில் அமைப்புகளோ அதற்கான அழுத்தத்தை வெளியில் இருந்து பிரயோகிப்பதும் இல்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது, தனியொரு கட்சியல்ல; வடக்கைத் தளமாகக் கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியைப் பிரதானமாக கொண்டுள்ள இக்கூட்டமைப்பின் தலைவராக, கிழக்கைச் சேர்ந்த இரா. சம்பந்தன் நியமிக்கப்பட்டார். இதன்மூலம் மிகவும் நுட்பமான தீர்மானமொன்று எடுக்கப்பட்டது.

அத்துடன், இதில் இதர சிறு கட்சிகள், இயக்கங்களும் உள்ளடங்கியுள்ளன. ஒருகாலத்தில் ஆயுத இயக்கங்களாக அறியப்பட்டவைகளும் இதில் உள்ளடக்கம். இதன்மூலம், ஆயுதத்தில் நம்பிக்கை வைத்திருந்த பலரை தேசிய அரசியல் நீரோட்டத்துக்குள் கலக்கச் செய்துள்ளார்கள் என்றும் கூறலாம்.

வெவ்வேறு கொள்கைகளுடன் பயணித்துக் கொண்டிருந்த தமிழ் அணிகளே, இன்று ஒரே குடையின் கீழ் வந்திருக்கின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிகள் மட்டுமன்றி, தேவையேற்படும் போது ஏனைய சிறு கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக ஒரே மேசையில் அமர்கின்றன.

இவ்வாறு வெவ்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றிய தமிழ் அரசியல் கட்சிகளும் ஆயுத இயக்கங்களாக ஒருகாலத்தில் அறியப்பட்ட அணிகளும் இன்று, தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்ற ஒரு மையப் புள்ளியில் சந்தித்திருக்கின்றன என்றால், தனித்துவ அடையாள அரசியல் என்ற ஒரே கோட்பாட்டின் கீழ் உதயமான முஸ்லிம் கட்சிகளாலும் பெரும்பான்மைக் கட்சிசார் முஸ்லிம் எம்.பிக்களாலும் ஏன் முஸ்லிம்களுக்காக ஒருமித்துக் குரல் எழுப்ப முடியாது?

இன்று, முஸ்லிம் அரசியலில் உள்ள பிரதான மூன்று கட்சிகளும், மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரபின் தனித்துவ அடையாள சிந்தனை என்ற வழித்தடத்தில் தோற்றம் பெற்றவை ஆகும். ஏனைய முஸ்லிம் அரசியல் அணிகளும் அதில் பயணிப்பதாகவே காட்டிக் கொள்கின்றன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்தது மட்டுமன்றி, அதைப் பெருவளர்ச்சி அடையச் செய்தவரும் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஆவார். இதை, 'அஷ்ரபின் கட்சி' என்றுதான் வரலாறு பதிவு செய்திருக்கின்றது. ரவூப் ஹக்கீம், இக்கட்சியின் தலைவரான போதும், மக்கள் மனங்களில் மறைந்த தலைவரின் இடத்தை பிடிக்கவில்லை என்பது தனிக்கதை.

அதேபோல், மறைந்த தலைவரின் சித்தாந்தங்களோடுதான் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், அஷ்ரப் காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கி, பின்னர் அதை தேசிய காங்கிரஸ் எனப் பெயர் மாற்றிக் கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன், அஷ்ரபின் மரணத்துக்குப் பின்னரே முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டார். அவர், அஷ்ரபின் பாசறையில் வளர்ந்தவரல்ல; எனினும், அவரது கொள்கை, கோட்பாடுகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டவர்.

அவ்வாறே, பிரதிநிதித்துவ அரசியலுக்கு வெளியில் இருக்கின்ற ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு, ஐக்கிய சமாதான முன்னணி, புதிதாக உதயமாகின்ற அரசியல் அணி எல்லாம், இதே கொள்கையை அடிப்படையாகக் கொண்டவையே என்பதை யாரும் மறுக்கவியலாது.

இவ்வாறு பலவிதமான ஒற்றுமைகளைக் கொண்டுள்ள முஸ்லிம் அரசியல் அணிகள், ஒன்றுபட்டு இந்தச் சமூகத்துக்காக எவ்வளவோ காரியங்களைச் சாதித்திருக்க முடியும். எத்தனையோ விடயங்களில் அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் ஊடாக, முஸ்லிம்களின் அபிலாஷைகள் ஒன்று, இரண்டையாவது நிவர்த்தி செய்திருக்கலாம். அது, கடந்த கால்நூற்றாண்டாக நடக்கவேயில்லை.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. உதாரணமாக, தலைமைத்துவப் போட்டி, ஈகோ, கட்சிசார் அரசியலை முன்கொண்டு செல்வதன் ஊடாகத் தமது அரசியல் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளல், பதவியும் பண ஆசையும், 'டீல்' மன்னர்களின் உள்வருகை எனப் பலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இதனால், சம்பந்தப்பட்ட முஸ்லிம் அணிகளின் தலைவர்கள், துருவப்பட்டுள்ளதான ஒரு பொய்த் தோற்றம் ஏற்பட்டுள்ளது. இதை நம்பி முஸ்லிம் சமூகமும் கட்சி வாரியாகப் பல துண்டங்களாகப் பிளவுபட்டுள்ளது. மாறாக, சமூகம் சார்ந்த அரசியலில், ஓர் அங்குல முன்னேற்றமும் ஏற்படவில்லை.

முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கூறினால், உடனே முஸ்லிம் கூட்டமைப்பா என்றுதான் கேட்கின்றார்கள். அதற்கான பதில், "இல்லை" என்பதாகும்.

தமிழ்க் கட்சிகளே கூட்டமைப்பாகச் செயற்படுகின்ற போது, முஸ்லிம் கட்சிகள் அவ்விதம் ஒன்றுபடுவது முடியாத காரியமல்ல. ஆனாலும், இன்றிருக்கின்ற முஸ்லிம் அரசியலுக்குள் அது சாத்தியமில்லை என்பது, பல தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இங்கே நாம் வலியுறுத்துவது, முஸ்லிம் கட்சிகள் மற்றும் அனைத்து எம்.பிக்களும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைக்காக ஒருபுள்ளியில் சந்தித்துப் பேசி, அரசியல் நகர்வுகளைச் செய்ய வேண்டும் என்பதை மட்டுமே ஆகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் பற்றி பல ஆண்டுகளாக பேசப்பட்டு வருகின்றது. புதிய அரசியலமைப்பு, தேர்தல் முறைமை மாற்றம் பற்றிப் பேசப்படுகின்றது. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, உலகின் கவனம் குவிந்திருக்கின்றது.

இவை ஒவ்வொரு விடயமும், முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புபட்டவையாகும். இவை உட்பட நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சட்டவாக்க, கட்டமைப்பு மாற்ற முன்னெடுப்புகளிலும் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. இந்தப் பொறுப்பை முஸ்லிம் அரசியல்வாதிகள் சுமந்துள்ளனர்.

இந்த நாட்டில் இனவாதமும் அரச ஆதரவுடனான நெருக்குவாரமும் மட்டுமே முஸ்லிம்களின் பிரச்சினை என்ற ஒரு மாயத் தோற்றத்தை, முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏற்படுத்தி இருக்கின்றனர்; இது தவறானதாகும்.

உண்மையில், முஸ்லிம்களுக்குப் பல சமூகப் பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாக, காணிப் பிரச்சினைகளை குறிப்பிடலாம். குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சனத்தொகையின் அளவுக்கு காணிகள் இல்லை என்பதுடன், இலட்சக்கணக்கான ஏக்கர் காணிகளையும் உரிமை கொண்டாட முடியாத நிலைமை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புகளால் அதுவும் குறிப்பாக தமிழ் ஆயுதக் குழுக்களால், முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட அநியாயங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. மனித உரிமைகள் மீறல்கள், காணாமல் போன முஸ்லிம்கள் பற்றிய விவரங்களை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட முறையாக ஆவணப்படுத்தவும் இல்லை; பேசவும் இல்லை.

இந்தியா, மியான்மார், இலங்கை என வியாபித்திருக்கின்ற இனவாதம், மதவாதம் மட்டுமன்றி, நிம்மதியாக வாழ்ந்துவந்த முஸ்லிம்களிடையே காளான் போல முளைத்துள்ள புதுப்புது மதக் கொள்கைகளும் பல்லின நாடுகளில் ஆபத்தானவையாகும். இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல், சமய தலைமைகள் காத்திரமாக செயற்பட்டதாக நிம்மதி கொள்ள முடியாதுள்ளது.

யார் தலைவராக இருக்க வேண்டும்? யார் யார் எம்.பிக்களாக வர வேண்டும்? யாருக்கு அமைச்சுப் பதவியும் யாருக்கு பிரதி அமைச்சும் கிடைக்க வேண்டும் என்பது, அரசியல்வாதிகளுக்கு வேண்டுமென்றால் ஒரு பெரிய விவகாரமாக தோன்றலாம். ஆனால், இவையெல்லாம் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறே, சமூகத்துக்கான பேரம் பேசல் என்ற கோதாவில், எந்தப் பெரும்பான்மைக் கட்சியுடன் 'டீல்' பேசலாம்; அதைவைத்து எவ்வாறு உழைத்து, அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம் போன்ற விடயங்கள் சமூகம் சார்பானவையல்ல.

எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது சொந்த விருப்புகள், நிலைப்பாடுகளை சமூகத்தின் விருப்பமாகக் காட்டுவதை முதலில் நிறுத்த வேண்டும். தமது தேவைகளுக்காக சமூகத்தை அடமானம் வைத்து, விலைபேசுகின்ற பாணியிலான கேடுகெட்ட அரசியலையும் கைவிட வேண்டும்.

முஸ்லிம் அணிகள் ஒரு கூட்டமைப்பாக வருவது சாத்தியமில்லை. ஆனால், ஒரு சமூகமாக முஸ்லிம்களின் பிரச்சினைகள், அபிலாஷைகள், எதிர்பார்ப்புகளை முஸ்லிம் அரசியல்வாதிகள் விளங்கிக் கொள்வதுடன், அவற்றை நிவர்த்தி செய்வதற்காக அனைத்து முஸ்லிம் தரப்புகளும் ஒருபுள்ளியில் சந்திக்கவும் உரையாடல்களை மேற்கொள்வதும் அவசியமாகும்.

## கடிதங்கள்

காட்டு யானைகளால்

### அழிக்கப்பட்ட 650க்கும் மேற்பட்ட தென்னைகள்



கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில், இதுவரை 650 க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

முட்கொம்பன் கிராமத்தில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் இவர்களில் பெரும்பாலான குடும்பங்கள், விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை (20) இரவு, தென்னந் தோட்டத்துக்குள் புகுந்த யானைகள், 35க்கும் மேற்பட்ட தென்னைகளை நாசம் செய்துள்ளன. இதேபோன்று நாளாந்தம், காட்டு யானைகள் தென்னை மரங்களை நாசம் செய்து வருவதுடன் குறிப்பிட்ட சில காலப்பகுதிக்குள் 650 க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

விவசாயத்தை மட்டும் வாழ்வாதாரமாகக் கொண்ட இம்மக்களின் பயிர்செய்கைகள், நாசமாக்கப்படுவதால், தங்களது வாழ்வாதாரம் அற்றுப்போவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்விதமான அழிவுகளுக்கு எந்தவிதமான நட்டஈடுகளும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். எனவே, உரியதரப்பினர் நடவடிக்கை எடுத்து, தமது வாழ்வாதாரத்தைப் பாதுக்காக்குமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.

–யது பாஸ்கரன்



# ஒரு சிறிய இடைவேளை

பிக்பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில் இருந்து பெப்ரவரி 20 ஆம் திகதியுடன் விலகிக் கொள்வதாகவும், ஒரு சிறிய இடைவெளிக்கு பின்னர் மீண்டும் பிக்பாஸ் நிகழ்ச்சியில் தொடர்வேன் என்றும் கமல்ஹாசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், பிக் பாஸ் மற்றும் விக்ரம் படப்பிடிப்பு ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் சமாளிக்க முடியவில்லை என கமல்ஹாசன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'பிக்பாஸ் நிகழ்ச்சி என் மனதிற்கு உகந்த, நான் விரும்பிச் செய்கிற ஒன்று. விக்ரம் பணிகள் பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகப் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் திட்டமிட்டு செயற்பட்டு வந்தோம். பிக்பாஸ் சீசன் 5 வழக்கம்போல சிறப்பான முறையில் நடந்து முடிந்தது.

இந்த நிகழ்ச்சி முதன்முறையாக தமிழில் ஓடிடியில் டிஜிட்டல் அவதாரம் எடுத்தபோது, அந்த மாற்றத்தை வரவேற்று முன்னெடுக்கும் பெருமை எனக்குக் கிடைத்தது. புதிய புதிய தொழில்நுட்பங்களை வரவேற்க வேண்டும்; மக்களை மகிழ்விக்கக் கிடைக்கும் எந்தச் சிறிய வாய்ப்பையும் தவறவிடக்கூடாது எனும் என் உத்வேகத்திற்குப் பிக்பாஸ் அல்டிமேட் ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது.

இது மிகச்சிறிய, தற்காலிக இடைவெளிதான். மிக விரைவில் பிக்பாஸ் சீசன் 6இல் உங்களை மீண்டும் சந்திக்கிறேன்' என கமல்ஹாசன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



### இலங்கை சிறையில் நிர்வாணப்படுத்தி சித்திரவதை:

# தமிழகம் திரும்பிய இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவிப்பு

இலங்கை சிறையில், நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்ததாக, தமிழகம் திரும்பிய இராமேஸ்வரம் மீனவர்கள் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

2021ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி இராமேஸ்வரம், புதுக்கோட்டை மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது. இவர்களை ஜனவரி 25ஆம் திகதி இலங்கை நீதிமன்றம் விடுவித்தது. ஆனால், கொரோனா பாதிப்பால் பெப்ரவரி 16ஆம் திகதி தான் தமிழகம் திரும்பினர். இலங்கை சிறையில், தங்களை கொடுமைப்படுத்தியதாக மீனவர்கள் தெரிவித்தனர் என தினமலர் செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

'விடுதலையான ராமேஸ்வரம் மீனவர் அ.மேக்லின்ராஜ், கண்ணீர் மல்க கூறியதாவது: கைதான முதல் நாளில், இலங்கை பொலிஸார் எங்களை தாக்கினர். பின்னர், யாழ்ப்பாணம் சிறையில் நிர்வாணப்படுத்தி, துர்நாற்றம் வீசும் தரமற்ற உணவை வழங்கி, பயங்கரவாதிகள் போல எங்களை 'டார்ச்சர்' செய்தனர்.

இதனால், உடல் மெலிந்து சோர்வடைந்தோம். சிறிய அறையில் 56 பேரையும் அடைத்து சித்திரவதை செய்தனர். ஜனவரி முதலாம் திகதி எங்களை சந்தித்த இலங்கை அமைச்சர் டக்ளஸ், அவருடன் வந்த மீனவர் சங்க தலைவர்கள் எங்களை இழிவுபடுத்தினர். ஜனவரி 25இல் விடுவித்ததும், கொழும்பு அருகே பாழடைந்த கட்டடத்தில் தங்க வைத்தனர். பல இரவுகள் தூக்கத்தைத் தொலைத்தோம். இவ்வாறு அவர் கூறினார்' என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## விக்னேஷ் சிவன் இயக்கத்தில் தோனி

சிம்பு நடிப்பில் வெளியான 'போடா போடி' திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர் இயக்குனர் விக்னேஷ் சிவன். அதன்பிறகு நானும் ரவுடி தான், தானா சேர்ந்த கூட்டம் போன்ற திரைப்படங்களை இயக்கினார்.

தற்போது காத்துவாக்குல் ரெண்டு காதல் என்ற திரைப்படத்தை நடிகர் விஜய் சேதுபதியை வைத்து இயக்கி வருகிறார்.

இந்நிலையில் விக்னேஷ் சிவன், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ். தோனியுடன் எடுத்து கொண்ட புகைப்படத்தை பதிவிட்டு அதில் சில விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

அதில் 'எனது முன்மாதிரியாகத் திகழும் ஒரு நபரை நான் சந்தித்தபோது, எப்படி உணர்ந்தேன் என்று ஒரு தலைப்பு மூலம் என்னால் விளக்கிட முடியாது. என் அடையாளம், என் நாயகன். நான் அவரைச் சந்தித்து, 'ஆக்ஷன்' சொல்லி, அவரை இயக்குவது பற்றிய ஒரு நல்ல கதை விரைவில் வரும்' என்று பதிவிட்டிருக்கிறார்.

இதன் மூலம் இயக்குநர் விக்னேஷ் சிவன், தோனியை வைத்து திரைப்படம் இயக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

## இசைஞானியின் அறிவிப்பு



'சூப்பர்மேன்' போன்ற திரைப்படங்கள் எல்லாம் இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் வரும் போது இசை ஏன் வரக்கூடாது என்ற எண்ணம் தனக்கு தோன்றியதாக இசைஞானி இளையராஜா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றில், 'திரைப்படங்களில் இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் என்று வெளியாகிக் கொண்டிருக்கிறது. அதேபோல் ஏன் இசையில் அடுத்தடுத்த பாகங்கள் வரக்கூடாது என்ற ஒரு கேள்வி எனக்கு ஏற்பட்டது.

அதுதான் 'ஹவ் டு நேம் இட் பார்ட் 2' விரைவில் வரப்போகிறது என்று இசைஞானி தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு இசை பிரியர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

1986 ஆம் ஆண்டு இசைஞானி இளையராஜா இசையமைத்த மியூசிக் அல்பம் 'ஹவ் டு நேம் இட்'. 10 பாடல்கள் அடங்கிய இந்த மியூசிக் அல்பம், இசை மேதை தியாகராஜர் மற்றும் மேற்கிந்திய இசை மேதை ஜே.எஸ்.பேச் ஆகியோர்களுக்கு அர்ப்பணம் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது.





## இலங்கைக்கு கடத்த முயன்ற விலைமதிப்பு மிக்க போதைபொருள் பிடிபட்டது

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், வேம்பார் கடற்கரை பகுதியில் இருந்து நாட்டுப்படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற 20 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான போதைபொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

வேம்பார் கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் இரவு (20) சந்தேகப்படும்படி நபர்கள் இருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து குறித்த இடத்துக்கு பொலிஸார் சென்றபோது, ஒரு நாட்டுப்படகு அதிவேகமாக கடலுக்கு செல்லத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்து, பொலிஸார் விசைப்படகு மூலமாக அந்தப் படகினை துரத்தியுள்ளனர். மேலும் ஜிபிஎஸ் கருவி மூலமாக, அந்த நாட்டுப்படகின் இடத்தைத் துல்லியமாக கண்டறிந்து, அதைச் சுற்றி வளைத்து பரிசோதனை செய்ததில் 10 கிலோ கிராம் கிரிஸ்டல் மெத்தாம்பேட்டமைன் என்ற போதை பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது இலங்கைக்கு கடத்தி செல்லப்படுவதும் தெரியவந்தது.





### இந்து இளைஞர் அடித்து கொலை:

## கர்நாடகாவில் பதற்றம்; கல்லூரிகளுக்கு விடுமுறை

கர்நாடகாவின் ஷிவ்மோகா மாவட்டத்தின் சீகேஹாட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு (20) 10 மணியளவில் அடையாளம் தெரியாத சில நபர்களால் ஹர்ஷா என்ற 26 வயதுடைய இளைஞர் தாக்கப்பட்டார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்தார். இறந்த நபர், விஷ்வ ஹிந்து பரிஷத் சார்புடையவராவர். இதையடுத்து, ஷிவமோகாவில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஷிவமோகா துணை ஆணையாளர் நேற்று (21) பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து உத்தரவிட்டுள்ளார். எஸ்எஸ்எல்சி பரீட்சைகளுக்குத் தயாரிப்புகள் நடைபெறுவதால் கிராமப்புறங்களில் மட்டும் பாடசாலைகள் நடைபெறுகின்றன.

இதற்கிடையில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர், "இந்தச் சம்பவத்துக்கும் கர்நாடக ஹிஜாப் விவகாரத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஹர்ஷா மீது ஐந்து பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. இரு தரப்புக்கும் இடையே முன் விரோதம் இருந்ததாக சந்தேகிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.






## அசத்தும் சமந்தா

சமந்தா நடித்து வரும் திரைப்படங்களில் ஒன்று 'சாகுந்தலம்'. மகாகவி காளிதாசர் எழுதிய சாகுந்தலம் என்ற புராணக் கதையின் அடிப்படையில் உருவாகி வரும் இந்தத் திரைப்படத்தில் சாகுந்தலாவாக சமந்தா நடித்து வருகிறார்.

மணிசர்மா இசையில் குணசேகர் இயக்கத்தில் உருவாகி வரும் இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டுள்ள நிலையில் சாகுந்தலாவாக சமந்தா தேவதை போல் இருப்பதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

சமந்தா, அதிதி பாலன், பிரகாஷ்ராஜ், மோகன்பாபு, மதுபாலா, கபீர் சிங் உள்ளிட்ட பலர் நடித்து வரும் இந்த இந்தத் திரைப்படத்தை தில் ராஜூ பெரும் பொருட்செலவில் தயாரித்து வருகிறார்.





## சூர்யாவை போன்று கீர்த்தி

தமிழில் இயக்குநர் செல்வராகன் நடிக்கும் சாணிக்காயிதம் திரைப்படத்தில் நடித்து வரும் நடிகை கீர்த்தி சுரேஷ், தற்போது மலையாளத்தில் நடிகர் டொவினோ தோமஸுடன் இணைந்து 'வாசி' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இந்தத் திரைப்படத்தை இயக்குநர் விஷ்ணு ஜி.ராகவ் இயக்கியுள்ளார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட இந்தத் திரைப்படத்தில் கீர்த்தி சுரேஷ் மற்றும் டொவினோ தோமஸ் இருவரும் சட்டத்தரணி கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

'வாசி' திரைப்படத்தை கீர்த்தி சுரேசின் அக்கா தன்னுடைய ரேவதி கலாமந்திர் என்ற நிறுவனத்தின் மூலம் தயாரித்துள்ளார். இந்நிலையில் தற்போது இந்தத் திரைப்படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்தப் போஸ்டர் நடிகர் சூர்யா நடிப்பில் வெளியான ஜெய்பீம் போலவுள்ளது என ரசிகர்கள் பலர் பதிவிட்டு வருகின்றனர்.





### மாட்டுத் தீவன ஊழல்:

## லாலு பிரசாத் யாதவுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை

ஐந்தாவது மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் லாலு பிரசாத் யாதவுக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனை வழங்கி சிபிஐ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஷ்டீரிய ஜனதா தள தலைவரான லாலு பிரசாத் யாதவ் பீகார் மாநிலத்தில் 1990 - 1997 வரையில் முதலமைச்சராக இருந்தார். அவர் பதவிவகித்த காலத்தில் கால்நடைகளுக்கு தீவனம் வாங்கியதாக 950 கோடி ரூபாய் அளவுக்கு மோசடி நடந்துள்ளது.

ஊழல் தொடர்பான நான்கு வழக்குகளிலும் லாலு பிரசாத் யாதவ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு 14 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதில் ஏழு வருட தண்டனை முடிந்து விட்டது. தற்போது லாலு பிரசாத் யாதவ் உடல் நலக்குறைவு காரணமாக வெளியே உள்ளார்.

ஐந்தாவது வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட லாலு பிரசாத் யாதவின் தண்டனை விவரத்தை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நேற்று (21) வாசித்தது.

விருத்தாசலம்:

### பிள்ளைகளைக் கொன்ற தாய்க்கு

## இரட்டை ஆயுள்தண்டனை

கடலூர் மாவட்டம், முட்டம் பெரிய கொனியைச் சேர்ந்தவர் வினோத் - சசிகலா தம்பதியினருக்கு வரோகா (4), விஜய ஸ்ரீ (3 மாதம்) ஆகிய குழந்தைகள் இருந்தனர். கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வந்த நிலையில், 2018ஆம் ஆண்டு விஜய ஸ்ரீ பிறந்தது முதலே, சசிகலாவுக்கு எது சாப்பிட்டாலும் தொடர் வாந்தி பிரச்சினைக் காரணமாக பல்வேறு இடங்களில் சிகிச்சைப் பெற்றும் குணமாகவில்லை.

இதனால் விரக்தியடைந்த சசிகலா, தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்து, தான் தற்கொலை செய்து கொண்டால் தனது குழந்தைகள் பிற்காலத்தில் கஷ்டப்படுவார்கள் என்று எண்ணி, குழந்தைகளை கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்து, 23-4-2018 அன்று இரண்டு குழந்தைகளையும் கழுத்தை நெரித்துக் கொலை செய்தவர், பின்னர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றபோது, அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இது குறித்து, பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கின் விசாரணை நிறைவு பெற்ற நிலையில், வழக்கின் தீர்ப்பை நேற்று (21) வாசித்த கடலூர் நீதிமன்ற நீதிபதி, "குழந்தைகளைக் கொன்ற குற்றத்துக்காக தாய் சசிகலாவிற்கு ஒரு கொலைக்கு ஓர் ஆயுள் தண்டனை வீதம், இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்படுகின்றது" என்று உத்தரவிட்டார்.

உசிலம்பட்டி:

## வெண்டைக்காயை நடுவீதியில் கொட்டிய விவசாயி

உசிலம்பட்டியில் தனது 10 ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயி தனசேகரன் என்பவர் வெண்டைக்காய் பயிரிட்டிருந்தார்.

வெண்டைக்காய் நல்ல விளைச்சல் கிடைத்த நிலையில், அறுவடை செய்து விற்பனைக்காக சந்தைக்கு எடுத்து வந்தார். அங்கு வெண்டைக்காய் கிலோ கிராம் ஐந்து ரூபாய்க்கு விலை போனதால் வேதனை



அடைந்த விவசாயி, தான் கொண்டு வந்த 50 கிலோ கிராம் வெண்டைக்காயை நடுவீதியில் வீசினார். இதனை அந்த வழியாக சாலையில் சென்ற பொதுமக்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

பிரான்ஸ்



பதற்றங்களுக்கு மத்தியில் பைடனும் புட்டினும்

# சந்திக்க இணக்கம்

உக்ரேனை ரஷ்யா ஆக்கிரமிக்கா விட்டால், உக்ரேனிய நெருக்கடி தொடர்பாக சந்திப்பு ஒன்றை மேற்கொள்வதற்கு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் கொள்கையளவில் இணங்கியுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் நிலையான நிலைத்தன்மை குறித்து இரண்டு தலைவர்களுக்கும் ஜனாதிபதி மக்ரோன் கூறியதாக அறிக்கையொன்றில் அவரது அலுவலகம் நேற்று(21) காலையில் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், திட்டமிடப்பட்ட சந்திப்பை வெள்ளை மாளிகை பின்னர் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, உடனடியாக இது குறித்து ரஷ்யா கருத்துத் தெரிவித்திருக்கவில்லை.

இந்நிலையில், தம்முடன் இராணுவ ஒத்திகைகளை ரஷ்யா நீடித்துள்ளதாக பெலாரஸ் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா

சர்வதேச விருந்தினர்களுக்கு

# எல்லையைத் திறந்தது

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளில் முதற் தடவையாக தனது சர்வதேச எல்லையை அவுஸ்திரேலியா மீளத் திறந்துள்ளது. இதனையடுத்து சந்தோஷமான குடும்ப மீளிணைப்புகள் இடம்பெற்றதுடன், சுற்றுல்லாத்துறையும் ஊக்கமடைகிறது.


கொரோனா வைரஸ் காரணமாக, உலகின் மிகவும் கடினமான பயணத் தடைகளை 2020ஆம் ஆண்டு மார்ச்சில் அவுஸ்திரேலியா விதித்திருந்தது.

அவுஸ்திரேலியர்களும் ஏனையோரும் கடந்தாண்டு இறுதியிலிருந்து அவுஸ்திரேலியா செல்ல அனுமதிக்கப்பட்டபோதும், ஏனைய வெளிநாட்டவர்கள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், சிட்னி விமான நிலையத்தில் நேற்று (21) கண்ணீருடன் மீளிணைப்புகள் இடம்பெற்றிருந்தன.

இரண்டு தடவைகள் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு தனிமைப்படுத்தல் தேவையில்லை என்ற நிலையில், தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதோர் அவர்களின் செலவில் 14 நாள்களுக்கு ஹொட்டலொன்றில் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கனடா



# "தலைநகரைக் கைப்பற்றினோம்"

கனேடியத் தலைநகர் ஒட்டாவாவின் முக்கிய பகுதியை வேலிகளுடன் கைப்பற்றியுள்ளதாக அந்நாட்டுப் பொலிஸார் நேற்று முன்தினம் (20) தெரிவித்துள்ளனர்.

குப்பைகளையும் பனியையும் அகற்றி வீதிகளை நகரப் பணியாளர்கள் சுத்தப்படுத்திய நிலையிலேயே பொலிஸாரின் குறித்த கருத்து வந்துள்ளது.

இரண்டு நாள்கள் பதற்றமான மோதல்களையடுத்தும், 191 கைதுகளையடுத்தும், ஒட்டாவாவின் மூன்று வார முற்றுகை முடிவுக்கு வந்திருந்தது.

இவ்வாண்டு ஜனவரி 28ஆம் திகதி முதல் நூற்றுக்கணக்கான ட்ரக்குகள், வாகனங்களைப் பயன்படுத்தி ஒட்டாவாவை ஆர்ப்பாட்டக்காரர்கள் முடக்கிய நிலையில், அரிதாகப் பயன்படுத்தப்படும் அவசரகால அதிகாரங்களை கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பயன்படுத்தியிருந்தார்.

ஈரான்



# அணுப் பேச்சுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

ஒஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் இடம்பெறும் ஈரானுக்கும் உலக நாடுகளுக்குமிடையிலான 2015 அணு ஒப்பந்தத்தை மீளக் கொண்டு வருவதற்கான பேச்சுகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக ஈரானிய வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் சயீட் கடிப்ஸடெஹ் நேற்று(21) தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐரோப்பிய பேரம்பேசுநர்களுடன் பேச்சுகள் இடம்பெறுவதாக ஈரானின் உயர் பாதுகாப்பு அதிகரியான அலி ஷம்கானி தெரிவித்துள்ளதுடன், அப்பேச்சுகள் தொடருவதுடன் ஐக்கிய அமெரிக்காவுடன் பேரம்பேசல்கள் அட்டவணையில் இல்லை எனவும் ஏனெனில் அதில் முன்னேற்றமெதுவுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான்



# இராணுவ ஜெட் வீழ்ந்தது

வட மேற்கு ஈரானிய நகரமான தப்ரிஸிலுள்ள பாடசாலையொன்றின் மதிலில் ஈரானிய இராணுவத்தால் பயன்படுத்தப்படும் ஐக்கிய அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட எஃப்-5 ஜெட் நேற்று (21) மோதி, இரண்டு விமானிகள் கொல்லப்பட்டதுடன், தரையிலிருந்த ஒருவர் கொல்லப்பட்டதாக ஈரானிய அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி காலை ஒன்பது மணிக்கு சற்று முன்பதாக விபத்து இடம்பெற்ற நிலையில், அந்நேரம் பாடசாலை மூடப்பட்டிருந்ததாக இராணுவப் பேச்சாளர் ஷஹின் தகி-கானி தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்கான காரணம் போலத் தோன்றுவதாக கானி தெரிவித்தபோதும், விசாரணை இடம்பெறுவதாகக் கூறியுள்ளார்.

# மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்த இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளை இந்தியா வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இந்த இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரில், கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என இந்தியா வெள்ளையடித்துள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணியின் தலைவர் கெரான் பொலார்ட், இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இந்தியா சார்பாக வேகப்பந்துவீச்சாளர் ஆவேஷ் கான் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ருத்துராஜ் கைகவாட்டை ஆரம்பத்திலேயே ஜேஸன் ஹோல்டரிடம் இழந்தது. அடுத்து வந்த ஷ்ரேயாஸ் ஐயர் விரைவாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 25 (16) ஓட்டங்களுடன் ஹெய்டன் வோல்ஷ் ஜூனியரிடம் வீழ்ந்த நிலையில், இஷன் கிஷனும் உடனேயே 34 (31) ஓட்டங்களுடன் றொஸ்டன் சேஸிடம் வீழ்ந்திருந்தார். அணித்தலைவர் றோஹித் ஷர்மாவும் குறிப்பிட்ட நேரத்தில் டொமினிக் ட்ரேக்ஸிடம் வீழ்ந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து சூரியகுமார் யாதவ்வின் 65 (31), வெங்கடேஷ் ஐயரின் ஆட்டமிழக்காத 35 (19) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், சேஸ் 4-0-23-1, ஹோல்டர் 4-0-29-1, ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 4-0-30-1, பேபியன் அலென் 1-0-5-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 185 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் ஆரம்பத்திலேயே கைல் மேயர்ஸ், ஷே ஹோப்பை தீபக் சஹரிடம் இழந்தது. பின்னர் றொவ்மன் பவலும், நிக்கலஸ் பூரானும் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஹர்ஷால் பட்டேலிடம் 25 (14) ஓட்டங்களோடு பவல் வீழ்ந்தார்.

அடுத்து வந்த பொலார்ட், ஹோல்டர் ஆகியோர் வெங்கடேஷ் ஐயரிடம் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த சேஸ் ஹர்ஷால் பட்டேலிடம் வீழ்ந்திருந்தார். தொடர்ந்து வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிக்கலஸ் பூரான் 61 (47) ஓட்டங்களோடு ஷர்துல் தாக்கூரிடம் வீழ்ந்ததோடு, 29 (21) ஓட்டங்களோடு பட்டேலிடம் றொமாறியோ ஷெப்பர்ட் வீழ்ந்தார். அடுத்து வந்த ட்ரேக்ஸ், தாக்கூரிடம் வீழ்ந்த நிலையில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களையே பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், பட்டேல் 4-0-22-3, தீபக் சஹர் 1.5-0-15-2, ஷர்துல் தாக்கூர் 4-0-33-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் சூரியகுமார் யாதவ் தெரிவாகினார்.



# தேசிய ஒலிம்பிக் குழுவின் அங்கத்தவராக அலியார் பைஸர்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

தேசிய ஒலிம்பிக் குழுவின் அங்கத்தவராக சாய்ந்தமருதைச் சேர்ந்த அலியார் பைஸர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் , உடற்கல்வி ஆசிரியராக பயிற்சி பெற்று, கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரியில் உடற்கல்வித்துறை ஆசிரியராக கடமையாற்றி தற்பொழுது நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியராக சேவையாற்றி வருகிறார்.

> **கிழக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கத்தின் ஸ்தாபகராகவும் அதன் பொதுச் செயலாளராகவும் இலங்கை பூப்பந்தாட்டச் சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளராகவும் சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகராகவும் அதன் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டு வருகிறார்**

கிழக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கத்தின் ஸ்தாபகராகவும், அதன் பொதுச் செயலாளராகவும், இலங்கை பூப்பந்தாட்டச் சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளராகவும், சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகராகவும் அதன் பொதுச் செயலாளராகவும் இவர் செயற்பட்டு வருகிறார்.

தேசிய ஒலிம்பிக் சபையின் அதியுயர் குழுவான கல்விச் செயற்குழு உறுப்பினராக நான்கு ஆண்டுகள் காலப்பகுதிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




# சம்பியனானது சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பேர்ள்ஸ்

■ எம்.என்.எம். அப்ராஸ்

அக்கரைப்பற்று, ஹிஜ்ராவிளையாட்டுகழகம் ஏற்பாடு செய்து நடத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரில் சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பேர்ள்ஸ் சம்பி யனானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சம்மாந்துறை ஈஸ்டர்ன் சலஞ்சேர்ஸை வென்றே பேர்ள்ஸ் சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பேர்ள்ஸின் அணித்தலைவர் ஏ.என்.எம். ஆபாக் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய சலஞ்ஞர்ஸ், 5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 56 ஒட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 57 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பேர்ள்ஸ் 5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற போட்டி சமநிலையில் முடிவடைய சுப்பர் ஓவர் மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டது.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய பேர்ள்ஸ் 14 ஓட்டங்க ளைப் பெற, சலஞ்சர்ஸ் 11 ஓட்டங்களை மாத்திரம்பெற்றுத் தோல்வியடைந்தது.

இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டிகளுக்கான

# தரவரிசையில் முதலாமிடத்துக்கு முன்னேறிய இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என வென்றமையைத் தொடர்ந்தே முதலாமிடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

இந்தியாவும், இங்கிலாந்தும் 269 என்ற ஒரேயளவான தரப்புள்ளிகளைக் கொண்டிருக்கின்றபோதும், இங்கிலாந்தின் 10, 474 புள்ளிகளை விட 10 புள்ளிகள் அதிகமாக இந்தியா கொண்டிருக்கின்றது.

முதல் 10 அணிகளின் தரவரிசை பின்வருமாறு,

இந்தியா, 2. இங்கிலாந்து, 3. பாகிஸ்தான், 4. நியூசிலாந்து, 5. தென்னாபிரிக்கா, 6. அவுஸ்திரேலியா, 7. மேற்கிந்தியத் தீவுகள், 8. ஆப்கானிஸ்தான், 9. இலங்கை, 10. பங்களாதேஷ்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டால் செவ்வாய்க்கிழமை, 22 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.